பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 தை 24 ரபி-அவ் 19 இதழ் 360
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-2-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

## இலங்கை கடத்தல்காரர்மீது துப்பாக்கிப் பிரயோகம்

(சென்னை)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெறுமதிவாய்ந்த பொருட்கள் பலவற்றை மோட்டார் லோஞ்சில் கடத்திச்செல்ல முயன்ற இலங்கையர்கள் மூவரை இந்தியசுங்கப்பகுதியினர் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் சென்ற வள்ளத்தின் மீது இந்திய சுங்கப்பகுதியினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

ஸ்கூட்டர் உதிரிப்பாகங்கள் புடவைகள் மற்றும் வெள்ளிப்பாத்திரங்கள் முதலியவற்றை இவர்கள் கடத்திச் செல்ல முயற்சிசெய்தனர். 30 ஆயிரம் ரூபாய் பெறுமதிவாய்ந்த இப் பொருட்கள் பறிமுதல்செய்யப்பட்டன. ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முத்தப்பேட்டைக்கப்பால் கடலில் வைத்து இவர்கள் பிடிபட்டனர்.

# திருமலை நகரசபை தலைவர் ராஜினுமா

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபைத்தலைவர் திரு. வெற்றிவேல் தம் பதவியை ராஜினுமா செய்துவிட்டார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உறுப்பினரான திரு. வெற்றிவேலுக்கும் கூட்டணியின் ஏனைய உறுப்பினர்களுக்குமிடையில் ஏற்பட்டகருத்து வேறுபாடே தலைவர் தம்பதவியை ராஜினுமா செய்தற்குக் காரணம் என்று தெரிகின்றது.

திரு. வெற்றிவேல் தாம் வகுக்கும் திட்டங்களுக்கு கூட்டணியின் இதர உறுப்பினர்கள் இடையூறுசெய்வதாகக் கூறியுள்ளார்.

திரு. வெற்றிவேல் நகரசபைத் தலைவராகப் பதவி ஏற்குமுன்னர் நகரசபையின் விசேட ஆணையாளராகப் பதவிவகித்தார்.

## யாழ். அரசஅதிபர் பற்றிய பண்டிதரின் கேள்வி
### பிரதி அமைச்சர் பதில்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசாமிபற்றிய ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்வியொன்று வெளிவிவகார பிரதிஅமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர நேற்று பாராளுமன்றத்தில் பதிலளித்தார். திரு. யோகேந்திரா 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் திகதி இலங்கை வெளிநாட்டுச்சேவைக்கென ஒரு பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டார். 1975ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி ஓய்வுபெற்ருர். ஓய்வுபெறும் போது அவருக்கு 125 பவுண் சம்பளம் வழங்கப்பட்டது.

அரசகரும மொழியில் தேர்ச்சிபெருதவர்கள் ஓய்வுபெறுவதற்குள்ள வழியின் கீழ் அவர் ஓய்வுபெற்ருர். புதுடில்லியில் அவர் வெளிநாட்டுச் சேவையில் இருந்தசமயம் தூதரகவிடுதியில் வசித்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஷா வெளியேறத் தடை பனுமா அரசு கட்டுப்பாடு?

(நியுயோர்க்)

ஈரானிய ஷா பனுமா அரசினுல் ஈரானிய அரசின் சார்பில் கைது செய்யப்பட்டு நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்தமாதம் 22ம் திகதி பிடிவிருந்து மூலம் கைது செய்யப்பட்ட இவர் ஈரானுக்கு திருப்பி அனுப்பப்படும் வரை பனுமாவிலிருந்து வெளியேறக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் விடுதலைசெய்யப்பட்டுள்ளதாக ஈரானிய அரசுடன்நெருங்கிய தொடர்புகொண்டுள்ள வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ஷாவை ஈரானுக்கு திருப்பி அழைக்க உத்தியோகபூர்வமாக விண்ணப்பிப்பதற்கு ஈரானுக்கு 60 நாள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

1906ம் ஆண்டின் ஈரான் அரசியல் அமைப்பின் விதிகள் மீறப்பட்டுள்ளது என்று இப் பிடிவிருந்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷா ஈரானில் விசாரிக்கப்பட்டாலும் பனுமாவில் தற்போது மரணதண்டனை அமுலில் இல்லாததினுல் ஷாவுக்கு சட்டபூர்வமான தண்டனை விதிக்கமுடியாதுஎன்றும் வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

ஈரானிய அரசியலமைப்பின்படி கொலை, இம்சைப்படுத்தல், பணத்தை சூறையாடுதல் ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்.

## வெளிநாட்டு மதுபான புதிய கடைகளுக்கு தடை
### சுற்றறிக்கை வாபஸ்

[கொழும்பு]

புதிதாக வெளிநாட்டு மதுபானக் கடைகளை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கும் சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப்பெற்றுக்கொள்வதென்று நேற்று மந்திரிசபை முடிவுசெய்தது. புதிதாக வெளிநாட்டு மதுபானக்கடைகளைத் திறப்பதற்கு உரியஇடங்களைத் தெரிவுசெய்யும்படி கலால் இலாகா சகல அரசாங்க அதிபர்களையும் மேற்படி சுற்றறிக்கைமூலம் முன்பு கேட்டிருந்தது.

கலால் திணைக்களத்தின் அதிபராக திரு. பி. சி. கருணுரத்னவை நியமிப்பது என்றும் மந்திரிசபை முடிவுசெய்தது.

மகாவலி திட்டத்தின் ஒரு பகுதியான விக்டோறியா அணைக்கட்டுக்கு மார்ச் மாதம் 23ந் திகதி அடிக்கல்லை நாட்

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக் குழு கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

கூட்டணி பாராளுமன்ற குழு இன்று காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் அவசரமாகக் கூடுகிறது. அவசரத் தந்தி மூலம் சகல எம். பிக்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனுதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிகிறது.

# 200 கலன் கசிப்பு!

(சீதுவ)

சீதுவப் பொலிசார் 200 கலனுக்கு மேற்பட்ட கசிப்பைக் கண்டுபிடித்துள்ளனர், இக்கசிப்பு ஆடம்பரமான வான் என்றிலேகொழும்பிற்கு எடுத்துச்செல்லப்பட்டபோதே இவ்வானை சைகை காட்டி மறித்தபொழுது அது நிற்காமல் சென்றது. அதனுல் சந்தேகம் கொண்ட பொலிசார் வான்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அதனை நிறுத்தியதாகச் சீதுவப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. தயா ஜெயசுந்தரா தெரிவித்தார்,

இவ்வளவு பெருமளவிலான கசிப்பை ஆடம்பர வானில் வைத்துப் பிடிப்பது மிகவும் குறைவாக நடக்கும் சம்பவங்களேயாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினுல் ரயர் வெடித்ததன் காரணமாகவே வான் நிறுத்தப்பட்டதென்றும் அல்லாவிடில் வானை நிறுத்தாது சென்றிருப்பார்களென்றும் அவர் கூறினுர்.

இதுசம்பந்தமான விசாரணையில் உதவும்பொருட்டு கைவிரல் அடையாள நிபுணர்களும் பொலிஸ் நாய்களும் வரவழைக்கப்படவிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

உணவுற்பத்தியில் தன்னிறைவு காண
இதோ ஓர் உன்னத ஆலோசனை......

விவசாயிகளே... ...உங்கள் பயிர்வளம் காத்து
அமோக விளைச்சலைப் பெற ..

பூச்சி புழுக்களை அறவே அழித்தொழிக்கும்
வன்மை மிக்க

★ பரத்தியன் E. 50
★ ருேகுருே - 40
★ பியூறடான் 3% GR
அதிசிறந்த பங்கசு கொல்லிகளான
எலோசால் 80% WP - குப்றெக்ஸ்
ஆகியவற்றைப் பாவித்து அதிக பயன் பெறுங்கள்
இறக்குமதி செய்து விநியோகிப்போர்

Kalkisuns

தொலைபேசி: 7711
தந்தி: 'ஸ்ரீராம்'

கல்கி சன்ஸ்
147, [illegible]

அடுத்தமாதம் நடக்கவிருந்த

## மேற்கிந்திய - பாரதம் கிரிக்கட் போட்டி ரத்து

(புதுடில்லி)

அடுத்தமாதம் மேற்கு இந்தியாவில் இந்திய கிரிக்கட் குழு மேற்கொள்ளவிருந்த சுற்றுப்பயணம் ரத்துசெய்யப்பட்டு விட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கட் கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் அடுத்தமாதம் 4 ம் திகதி கிரிக்கட் போட்டி நடைபெறவிருந்தது.

இருகோஷ்டிகளிலும் விளையாடவேண்டிய தலைசிறந்த ஆட்டக்காரர்கள் இந்தப் போட்டியின்போது கலந்துகொள்ள முடியாமல்போனதே இந்திய கோஷ்டியின் பயணம் ரத்தானதற்குக் காரணமாகும்.

இந்திய கோஷ்டியின் முன்னுள் தலைவர் சுனில் கவாஸ்கரும் சிறந்த ஆட்டக்காரரான கபில்தேவ் ஆகிய இருவரும் இந்தப் பயணத்தில் இடம்பெறமாட்டார்கள் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. இதேபோல் மேற்கிந்திய கோஷ்டியிலும் தலைசிறந்த சில ஆட்டக்காரர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாமலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கச்சேரி - நல்லூர் வீதியில் ஒருபரப்பு குடியிருப்புக் காணி ரூபா 25,000/-க்கு மேல் விரும்பினவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும், விளம்பர இல: 4897, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4897

---

வூல்ஸ்லி சீனியர் 2 அங்குலம் (Wolsley Water Pump) நீர் இறைக்கும் யந்திரம் விற்பனைக்குண்டு. நா. சிவலிங்கம், தம்பாவத்தை, தம்பசெட்டி, பருத்தித்துறை. 4898

---

புதிய வீட்டுடன் 3¾ பரப்புக் காணி சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர் மார்க்கட்டுக் கருகாமையில் உண்டு. பயன்தரும் தென்னை, மா உண்டு. தொடர்புகொள்ளவும். தி. குமாரசாமி, சந்திர சேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர். 4892

---

### WANTED

Dispenser / Clerk for private Dispensary & Surgery. Knowledge of English essential Apply Dispensary & Surgery, 69, Point-Pedro Road, Jaffna. 4899

---

### தேவை

பற்றிக் வேலை தெரிந்த அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும், க. பூபாலசிங்கம், பொற்பதிரோட் கொக்குவில் கிழக்கு, கொக்குவில் 4900

---

### FOR SALE

Pegeot 504 1974 Model. Spotless Condition, Ring: 221. 4896

---

### தவறிவிட்டது

LANCIAவீல்கப் (wheelcup) ஒன்று நேற்று கே. கே. எஸ். வீதியில்கார்செல்லும்பொழுது தவறிவிட்டது. தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். Ramson's 19, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 4893

---



39 மணித்தியாலங்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை 270 மைல் தூரத்தை வலம்புரி பாணியில் சைக்கிளோடி புதிய சாதனையொன்றை நிலைநாட்டிய யாழ்ப்பாணம் முஸ்லிம் தெருவைச் சேர்ந்த, ஜனாப் பரீத் நஸீருக்கு, யாழ்ப்பாண முஸ்லிம்மக்கள், யாழ்ப்பாணம் ஐந்துசந்தியில் அளித்தபொது வரவேற்பில், வர்த்தகர்ஜனாப் ஷேகு முகம்மது [சின்னத்தம்பி] ஜனாப் நஸீருக்கு பாராட்டுப்பத்திரம் வாசித்து வழங்குகிறார்.

# "அமரர் பாலசுப்பிரமணியம் சுயநலம்கருதாத தொண்டன்

(அரியாலை)

"தொண்டர்கள் சிலரின் தொண்டுகள் சுயநலம் கலந்ததாக இருக்கின்றன. உண்மையான தொண்டர்கள் சிலர் தான் இன்று எம்மத்தியில் வாழ்கிறார்கள். சுயநலம் கருதாது பொதுநலம் கருதி உழைத்த சிறந்த தொண்டர்களில் ஒருவனாக காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் விளங்கினார்."

இவ்வாறு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் 46 வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் சிறந்த தொழிற்சங்கவாதியுமான காலஞ்சென்ற என். பாலசுப் பிர மணியம் அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு அனுதாபத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய சங்க உபதலைவர் திரு. த. இராஜேந்திரம் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. து. விசுவநாதன் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராஜேந்திரம் தொடர்ந்து பேசுகையில் "காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் துடிப்புள்ள இளைஞன். என்ன பிரச்னைகள் ஏற்பட்டபொழுதிலும் அதனை இன்முகத்தோடுதீர்த்து வைக்கும் சுபாவம் உள்ள இவர் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தையும் அரசினர் ஆசிரியர் சங்கத்தையும் ஒன்றிணைக்க அரும்பாடுபட்டார். இந்த இரண்டு சங்கங்களின் ஒன்றிணைப்பின் மூலம் உருவான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளராக இருந்து அவர் ஆற்றிய சேவைகளை ஆசிரியஉலகம்மறந்துவிட முடியாது. இவரது இழப்பு ஆசிரிய சமூகத்திற்குப் பேரிழப்பாகும்" என்றார், (கு)

---

## செனி. தோமஸ்-யாழ். பரியோவான்

# கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி இல்லை

(கொழும்பு)

கொழும்பு சென்ற் தோமஸ் கல்லூரிக்கும் யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

சென்ற் தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென்ற் தோமஸ் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. செல்வன் பிராங் மொலமூரே 53 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீசிய பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ். ஜெயக்குமார் 47 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளையும் செல்வன் எஸ். தனஞ்செயன் 36 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ் பரியோவான் கல்லூரி முதலாவது ஆட்டத்தில்எல்லா விக்கட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். கருணகுமார் 28 ஓட்டங்களை பெற்றார். சென்ற் தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த ரொனி வீரசிங்க 32 ஓட்டங்களைப் கொடுத்து 4 விக்கட்டுகளையும் ஏ. கெபறகொட 45 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

சென்ற். தோமஸ் கல்லூரி தனது இரண்டாரது ஆட்டத்தில் 6 விக்கட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. ஸ்ரீவன் அந்தோனிஷ் 97 ஓட்டங்களைப் பெற்றார். பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். தனஞ்சயன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் எஸ். கருணகுமரர் 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

யாழ். பரியோவான் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 3 விக்கட்டுகளை இழந்து [illegible] ஓட்டங்களை எடுத்து நேரம் முடிவடைந்ததால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த என். வசந்தன் இரண்டாவது ஆட்டத்தில் ஆட்டமிளக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

(அரி. நி.- கு)

---

## 'தந்தை செல்வா' கனிஷ்டபாடசாலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிகனிஷ்டபிரிவுக்கு 'தந்தை செல்வா தொடக்கநிலைப் பாடசாலை' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

யூனியன் கல்லூரி கனிஷ்ட பிரிவுக்கு 'தந்தை செல்வா தொடக்கநிலைப் பாடசாலை' எனப் பெயர்சூட்டவேண்டும் என்று கடந்தவருடம் இப்பாடசாலைப் பெற்றோர் ஆசிரி சங்கம் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. இப்பொழுது தான் இப்பெயர் சூட்டுவதற்கான அனுமதி கல்வியமைச்சிலிருந்து கிடைத்துள்ளது,

]நா]

---


யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

## கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் கழிவு கடதாசி கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. விண்ணப்ப முடிவு திகதி 15-02-1980.

மேலதிக விபரங்களை சங்க தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


# "சிறப்பான சேவையின்மூலம் நற்பெயரைப் பெற்றவர்"

(யாழ்ப்பாணம்)

"சிறந்த சேவையின் மூலம் ஆசிரியர், மாணவர், பெற்றோர் மத்தியில் தமக்கென நற்பெயரை ஏற்படுத்திக் கொண்டசங்கீத ஆசிரியை திருமதி க. ஞானம்பிகை பதவியிலிருந்து ஓய்வு பெறுவது எமக்குப் பெருநஷ்டமாகும்"

இவ்வாறு, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி வித்தியாலய சங்கீத ஆசிரியை திருமதி க. ஞானம்பிகையின் பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய மேற்படி வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்குத் தமிழ் ஆசிரியர் திரு. எஸ். எம். நவரத்தினம் தலைமை வாகித்தார். அவர் தமது தலைமையுரையில் சங்கீத ஆசிரியையின் தகுதி, அடக்கசுபாவம், செயற்றிறன் என்பவற்றை எடுத்துக் கூறினார். சிறப்புரையாற்றிய ஆசிரியர் திரு. ம. சரவணபவசர்மா "பதவியால் சிலர் பெருமையடைகிறார்கள். சிலரால் பதவி பெருமையடைகிறது. சங்கீத ஆசிரியை திருமதி க. ஞானம்பிகையால் அவரது பதவி பெருமையடைகிறது. அன்பு, இரக்கம் சிறுவர்களைக் கவரும் ஆற்றல் ஆகிய பண்புகளால் எல்லோரினதும் பாராட்டைப் பெற்றார். அவரது சேவை அளப்பரியது அவர் ஓய்வு பெறுவது எமது பாடசாலைக்குப் பெருநஷ்டம்' எனக் குறிப்பிட்டார்.

செல்வி. ம. முத்து, திருமதி யோ. இராஜசிங்கம், திருமதி ப. நல்லதம்பி ஆகியோரும் அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசினர். ஆசிரியை திருமதி க. ஞானம்பிகை தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப்பேசினார்.

......

## வங்கிக் கட்டிடம் பூர்த்தி

(பண்டத்தரிப்பு)

அராலி கிராவோலை கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டிடம் 65 ஆயிரம் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கடந்த 1979ம் வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

......

## பாடசாலைப் பொருட்காட்சி

(உடுப்பிட்டி)

பருத்தித்துறைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான பொருட்காட்சி மார்ச் மாதம் 10ம் திகதி நடைபெறவுள்ளது.

இரு தினங்கள் இடம்பெறும் இப் பொருட்காட்சி பருத்தித்துறை மெடிஸ்த மகளிர் கல்லூரியில் நடைபெறும். இக் கல்வி வட்டாரத்திலுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளும், கல்லூரிகளும் இதில் பங்குகொள்ளும். (கு)

......

## தென்னை அபிவிருத்தி

(மன்னார்)

தென்னை அபிவிருத்தியைப் பெருக்குவதற்காக எருக்கலம்பிட்டி தென்னை வளர்ப்புச் சங்கம் தென்னை வளர்ப்பதுபற்றியும், நோய்களைத் தடுப்பது பற்றியும், சிறு தென்னந் தோட்டச் சொந்தக்காரர்களுக்கும், தென்னை வளர்ப்போருக்கும் பிரசாரம் செய்து வருகிறது. (கு)

......

## நெல்லின் விலை அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் காலபோக அறுவடை தொடங்கியதையடுத்து நெல்லின் விலை உயர்ந்துள்ளது.

இங்கு அறுவடை செய்யப்பட்ட நெல்லைச் சங்கம் 180 ரூபாவாகவும் தனியார் 140 ரூபாவாகவும் வாங்கி வருகிறார்கள். விவசாயிகள் அநேகமாகத் தனியாருக்கே நெல்லை விற்பனைசெய்து வருகிறார்கள். (கு)

---

## நூல் விமர்சனவிழா

(நெல்லியடி)

தெளிவத்தை ஜோசப்பின் 'நாமிருக்கும் நாடே' நூல் விமர்சனவிழா இம்மாதம் 10ந் திகதி நெல்லியடி கெயின்ஸ் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

'தேன்கூடு' வாசகர் வட்டம் நடாத்தும் இவ்விழா திரு. நெல்லை நடேஸ் தலைமை நடைபெறும். கே. டானியல், கே. தங்கவடிவேல், டானியல் அன்ரனி ஆகியோர் விமசர்ன உரையாற்றுவர். திரு. மு, நித்தியானந்தன் பதிலுரையாற்றுவார், (நா-கு)

......

## வெற்றி தோல்வி இல்லை

[கொழும்பு]

யாழ். பரி. யோவான் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்கும், கொழும்பு இராசசிங்கம் நிறுவனத்துக் கிரிக்சட் கோஷ்டிக்குமிடையில் கொழும்பு ஓவல் மைதானத்தில் நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம் வருமாறு:- பரி. யோவான் கல்லூரி- 99, 3-103, இராசசிங்கம் நிறுவனம் 9-246.

[அரி. நி-கு]

......

## 162 நாய்கள் பிடிபட்டன

(பண்டத்தரிப்பு)

ஆனைக்கோட்டை சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள நவாலி, ஆனைக்கோட்டை, சாவற்காடு ஆகிய இடங்களில் கட்டாக்காலிகளாகத் திரிந்த சுமார் 162 நாய்கள் கடந்த வாரம் பிடித்துக் கொல்லப்பட்டன.

ஆனைக்கோட்டைச் சுகாதாரப் பரிசோதகர் திரு. சி. இராஜவரோதயம் கொழும்பிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட விஷவாய்வு வான் மூலம் இந்த நாய்களைப் பிடித்துக் கொல்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

......

## பிச்சைக்காரருக்கு அதிர்ஷ்டம்

(மன்னார்)

மன்னார் பஸ்நிலையத்தில் பஸ்சில் ஏறிப் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது.

பஸ்ஸில் கண்டக்டர்கள் 5சதம், 10சதம், மிகுதிப் பணத்தைப் பிரயாணிகளுக்குக் கொடுப்பதில்லை. இதனால் பிரயாணிகள் பிச்சைக்காரர்களிடம் சில்லறைகளை வாங்கிப் பஸ் கட்டணத்தைச் செலுத்திவிட்டு மிகுதிப்பணத்தைப் பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தன் கடமையை ஆற்றுவதனால் சம்பாதிக்கப்படும் உரிமையே நிலையானது.

-மகாத்மா காந்தி

## மக்கள் கருத்து

### உசன் மகாவித்தியாலயம்

யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியும் அவருடைய குழுவினரும் 29-1-80 செவ்வாய்க்கிழமை கலந்துகொண்ட உசன் கிராமக் கலந்துரையாடல் பற்றி 1-2-80 வெள்ளிக்கிழமை ''ஈழநாடு'' இதழில் வெளியான செய்தியில், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் சம்பந்தமாகத் தவறான சில விபரங்கள் இடம்பெற்றுள்ளன. இப்போதைய அதிபரின் நிர்வாகத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்ற கருத்தை அச்செய்தி ஏற்படுத்துவதால் கீழ்க்கண்ட சரியான விபரங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

1969 ம் ஆண்டில் ஓர் உதவி ஆசிரியராக இங்கு நியமிக்கப்பட்ட திரு. சி. சிவசரவணபவன், 1974 ம் ஆண்டில் தற்காலிக அதிபராக நியமிக்கப்பட்டார். காலஞ்சென்ற திரு. ம. சத்தியமூர்த்தி தற்காலிக அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் 1963-64 ல் இம்மகாவித்தியாலயத்திலிருந்து ஒரு மாணவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் ஐந்து ஆண்டுகளாக எவருமே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படவில்லை. 1970 ல் ஒரு மாணவியும் 1973 ல் மூவரும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. சி. சிவசரவணபவன் தற்காலிக அதிபர்ப் பதவியேற்ற 1974 ல் மூவரும் 1975 ல் இருவரும் 1977 ல் ஐந்து பேரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். 1979 ம் ஆண்டுப் பெறுபேற்றின் அடிப்படையில் இரண்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்புடையோராயிருக்கின்றனர்.

விளையாட்டுத்துறையிலும் கலைத்துறையிலும் இம்மகாவித்தியாலய மாணவர்கள் வட்டார, மாவட்டப் போட்டிகளிற் சிறப்பிடங்கள் பலவற்றைப் பெற்றுள்ளனர். ''குற்றாலக்குறவஞ்சி'' என்ற நாட்டிய நாடகம், ''பாசக்குரல்'' என்ற நாடகம் இப்போதைய அதிபரால் எழுதித் தயாரிக்கப்பட்டுப் பரிசு பெற்றவை. மாணவர் மன்ற வெளியீடாக ''இளந்தளிர்'' என்ற சஞ்சிகையை அச்சில் வெளியிட்ட பாடசாலையும் இதுவேயாகும். சாவகச்சேரித் தொகுதியில் வேறு எந்தப் பாடசாலையாவது இத்தகைய ஒரு சஞ்சிகையை அச்சேற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் நூற்றாண்டு விழாப் பேச்சுப் போட்டியில் கீழ்ப் பிரிவில் சாவகச்சேரி வட்டாரத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றும் இடத்தையும் பெற்றவர், இம்மகாவித்தியாலய மாணவியே என்பதையும் பெருமையுடன் குறிப்பிடுகின்றோம்.

சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் ஒதுக்கீடு செய்த நிதியுடன் ஐம்பத்தாறாயிரம் ரூபா பெறுமதியான வகுப்பறைகள் தற்போதைய அதிபரால் கட்டப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் எண்ணாயிரம் ரூபா செலவில் விஞ்ஞான அறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. உபயோகிக்கப்படாத நிலையில் வேலணை பாடசாலையில் இருந்த விஞ்ஞான உபகரணங்களை இம்மகாவித்தியாலயத்திற்கு அதிபர் பெற்றுத்தந்துள்ளார்.

தற்போதைய அதிபர் பதவியேற்ற 1974 ம் ஆண்டில் 505 ஆக இருந்த மாணவர் தொகை இப்பொழுது 705 ஆக உயர்ந்துள்ளதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

மு. ஒப்பிலாமணி,
செயலாளர்,
உசன் இராமநாதன் மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கம்.

உசன்,
மிருசுவில்.

# ''இன்றைய கல்வி நிலை ஏகாதிபத்திய காலத்தைவிட பயங்கரமாக மாறிவிட்டது!''

— 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''தேர்வை மட்டுமே மையமாகக்கொண்டு பாடப்புத்தகங்களை மட்டும் மாணவர்கள் படிக்கின்றார்கள். அதற்கு வெளியே பரந்த அறிவையோ அனுபவத்தையோ மாணவர்கள் பெறுவதில்லை. அதிகாலை நாலுமணி முதல் இரவு பத்து-பதினொரு மணிவரை தனியார் கல்வி நிலையங்களிலும், பாடசாலைகளிலுமே அடைந்து கிடக்கின்றனர். விளையாட்டிலோ, இலக்கியத்திலோ, பிற துறைகளிலோ அவர்கள் ஈடுபடுவதில்லை. வெறும் யந்திரங்களாக மாணவர்கள் இப்பொழுது மாறிவருகின்றனர்''

இவ்வாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலைய ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமான திரு. அ. அமிர்தலிங்கம் கவலை தெரிவித்தார்.

''இன்றைய கல்வி நிலையை ஒரு பாலைவனத்துக்கு ஒப்பிடலாம். தேர்வு முறைகளே இந்தநிலைக்குக்காரணம். தேர்வு முறை முற்றாக மாற்றியமைக்கப்படாதவரை இந்த நிலையில் மாற்றம் ஏற்படாது. எனினும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் முயற்சிகளை நோக்கும்போது நிலையம் பாலைவனத்தில் ஒரு பசுந்தரையாக உள்ளது என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்'' என்று கூறிய திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-

''வெளிக்கள நிலையம் மேற்கொள்ளும் பணிகளைப்பார்வையிட்டபோதும், கேள்வியுற்றபோதும், இச்சிறிய கட்டிடப் பரப்புக்குள் உலகப் புகழைத் தேடித்தரும் விரிந்து பரந்த செயல்கள் எவ்வாறு நிகழ முடியும்என்று ஆச்சரியப்பட்டேன். ஈடுபாடும், ஆர்வமும், தன்னல மறுப்பும் கொண்ட உழைப்பாளிகள் சிலர் தனிப்பட்ட முறையில் எமது பிரதேச அபிவிருத்திக்கும் முழு நாட்டின் அபிவிருத்திக்கும் ஆற்றிவரும் பணி மிக உயர்ந்தது.

''அரசியல் மட்டும் நாட்டைக் கட்டியெழுப்பி விடுவதில்லை. அறிவியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளிலும் விருத்தி அவசியம்.



வெளிக்கள நிலையம் போன்ற நிறுவனங்களின் சீரிய பணியிலேயே எமது எதிர்கால வளம் தங்கியுள்ளது. இதுபோன்ற நிலையங்களுக்கு அரசு தாராளமாக உதவ வேண்டியது அவசியம். எதிர்காலத்தில் அரசு முழுமையாக உதவும் என நம்புகிறேன்.

''இலங்கை குடியேற்ற நாடாகப் பிரித்தானிய அரசின் கீழ் அடிமைப்பட்டிருந்தபோது அரச பணிக்குரிய எழுது வினைஞர்களையும் பிற அலுவலர்களையும் உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருந்தது. எழுது வினைஞர்களை உருவாக்கும் மக்காலேயின் கல்வித் திட்டம், யாழ்ப்பாணத்தில் தான் வெற்றிகரமாக நடைபெற்றது. இத்தகைய கல்வித்திட்டத்துள் முற்றாக ஒடுங்கிய தமிழர், பிரித்தானிய ஏகாதிபத்தியம் என்ற வண்டிற்சில்லின் அச்சாணியாக விளங்கினார்கள். எனினும், சிலர் இந்த வான்முறைகளை எல்லாம் கடந்து கல்வி ஆர்வம் காரணமாக கல்விமான்களாகவும் விஞ்ஞானிகளாகவும் மலர்ந்து உலகப் புகழ்பெற்று உயர்ந்தனர். ஆனால், இன்றைய கல்வி நிலை ஏகாதிபத்திய காலத்தைவிட மிகப் பயங்கரமாக மாறிவிட்டது. இதனைத் தடுத்து நிறுத்துவது கல்விமான்களின் கடமை'' என்று கூறினார்.

நிலையத்தின் காப்பாளரும், வடமாநிலக் கல்விப் பணிப்பாளருமான திரு. தி. மாணிக்கவாசகர் தமது உரையில்; நிலையத்தின் சேவைகளைப் பாராட்டியதோடு, கல்வித்துறையில் தமது கடமையின் பெரும் பகுதியை நிலையம் செய்து முடிப்பதால் தமது சுமை பெருமளவுக்குக் குறைந்துள்ளதாகக் கூறினார்.

நிலையத் தலைவர் திரு. கே. எஸ். குகதாசன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். திரு. மு. அற்புதநாதன் சிறப்புரை ஆற்றினார். செயலாளர் திரு. வீ. கே. ஈசுரபாதம் நன்றி கூறினார். (மொ

## செல்வா கோரி வந்த தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளன

### அமைச்சர் 'இராசு' கூறுகிறார்

(மட்டக்களப்பு)

''தந்தை செல்வா கோரி வந்த தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் சாதாரண கசற்றில் அல்லாமல் அரசியல் அமைப் ரீதியாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழ்மொழி பதிவு மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் தார்மீக அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது இந்த நிலையிலும் தமிழினத்தை ஏமாற்றிப் பிழைப்பதற்கு சிலர் இன்னும் முயற்சிக்கின்றார்கள்''.

இவ்வாறு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை புதூர் கிராமத்தில் கிராமத்தில் மின்னொளி வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போது கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:

''நான் அரசியலில் குப்பை என வர்ணிக்கப்பட்டவன். மகாத்மாகாந்தி அரசியல்தான் அயோக்கியர்களின் புகலிடம் என வருணித்தார். நான் மிகவும் பின்தங்கிய உழைக்கும் வர்க்கத்திற்காகவும் அவர்களது உயர்வுக்காகவும் அரசியலை தூய்மையான தொண்டாக கருதி செயல்படுகின்றேன். சில அரசியல்வாதிகள் சுண்ணடி மாளிகையினுள் இருந்துகொண்டே கல்எறிகிறார்கள். இதன் விளைவை அவர்கள் விரைவில் அடைவது திண்ணம். தமிழினத்தின் பெயரைக்கூறிக் கூறி இனி மேலும் ஏமாற்றமுடியாது. அவர்களின் போலி முகத்திரை விரைவில் கிழித்து எறியப்படும்.

தந்தைசெல்வா 30 ஆண்டுகளாக கோரி வந்த தமிழினத்தின் மொழி உரிமையும் பிரதேசஅபிவிருத்தியும் அரசமைப்பு மூலம் இந்த அரசாங்கம் உறுதி செய்துள்ளது. இதற்கு பொறுப்பாகஅரசாங்கம் என்னை அமைச்சராக நியமனம் செய்துள்ளது. ஆனால் தமிழினத்தைக்கூறி அரசியல் வியாபாரம் நடாத்துவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன்.

''அரசாங்கம் தமிழ் மக்கள் மேல் அனுதாபம் கொண்டுதான் செயல்படுகின்றது. இதைச் சில சக்திகள் தவறாகப் பிரச்சாரம் செய்து தமிழினத்தை திசைதிருப்பப் பார்க்கிறார்கள். நான் பிரச்னைகளை நன்கு உணர்ந்து செயல்படுகின்றேன். அடித்தள சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைத்தவன் என்று பிற்காலம் நினைக்கட்டும் என்ற எண்ணத்தில் தான் என்னை அர்ப்பணித்துள்ளேன்.

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தியில் மட்டுமல்ல தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் அரசாங்கம் விசேட கவனம் செலுத்திவருகின்றது.'' (நா)

## சிறைச்சாலை அதிகாரிகளின் தைப்பூசவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலை அதிகாரிகளினால் நடாத்தப்பட்ட கோட்டை முனீஸ்வரர் ஆலய தைப்பூச விழாவில் வடபிராந்திய பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. பி. மகேந்திரன், மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்டினர், பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன், யாழ். சிறைச்சாலை அத்தியட்சர் திரு. ஜே. எஸ். எஸ். தர்மரெத்தினம், சிறைச்சாலை அதிகாரி திரு. சி. மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர், சிறைச்சாலை அதிகாரிகளால் அன்னதானமும் வழங்கப்பட்டது. இரவு விசேட மேளக்கச்சேரிகளும் இன்னிசைக் கச்சேரிகளும் இடம் பெற்றன. (கொ)

## மன்னார் ஆஸ்பத்திரிக்கு புதிய பிரசவ விடுதி

(மன்னார்)

மன்னார் அரசினர் வைத்தியசாலையில் பல அபிவிருத்தி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்த வைத்தியசாலையில் இயங்கிவரும் சபை துரிதமாக ஈடுபட்டுவருகிறது.

இதுவரை காலமும் ஒரு அம்புலன்ஸ் வண்டி பட்டுமே மன்னார் மாவட்டத்தில்உள்ள எல்லா வைத்தியசாலையிலும் சேவையிலீடுபட்டு வந்தது. விரைவில மேலும ஒரு அம்புலன்ஸ் வண்டி வரவிருக்கிறது. வைத்தியசாலை ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஒரு லட்சரூபா செலவில் மேலும் ஒரு பிரசவ விடுதி கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. வைத்திய அதிகாரிகள் தங்குவதற்கு வீடுகள் கட்டவென இவ்வருடம் 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ... இயக்க இயந்திரம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. (...)

### என் அப்பா நீ

பாண்டு போனதினால்
மறைந்திடுமோ உன்
தியாகம்
ஆண்டுகள் பத்தாயினும்
ஆறிடுமோ உன்
துயரம்;
ஈண்டு உன்றன் பிள்ளை
நான்
ஈனமுடன் ஏங்குகி
றேன்
மாண்ட என் அப்பாவே,
மறுமையிலும்
மறப்பேனோ!

சேனைகளைக் கண்ட
தில்லை
சேனாதி யென்றிருந்
தாய்,
ஏனையா போய்விட்டாய்;
ஏனிந்த வாழ்க்கை
யென்று?
தொல்லைகளைக் கண்ட
தில்லை
தோழமையைத்
தந்திருந்தாய்
எல்லைகளைக் கண்டாயோ
ஏற்றமிகு அப்பாவே!

-அண்ணை
சே. சிவராஜா

## மாணவருக்கு கிரிக்கட் பயிற்சி

(அரியாலை)

மகாராஜா நிறுவனத்தின் ஆதரவில் வடபகுதியிலுள்ள பிரபல கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மூன்று நாட்கள் கிரிக்கட் பயிற்சி அளிக்கப்படுகிறது.

லண்டன் வோறிக்சியர் (கவுன்ரி) கிரு. பீற்றர் லிபிங்ரன் இப்பயிற்சி வகுப்பை நடாத்தி வருகிறார். இப்பயிற்சி வகுப்பில் யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

வைத்திய கலாநிதி பிலிப் அவர்கள் இப்பயிற்சிக்குப் பொறுப்பாக இருக்கின்றார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறோம் என்பது தவறு

## இது திட்டமிட்ட பிரசாரம்" என்கிறார் 'அமிர்'

(பண்டத்தரிப்பு)

"அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு வழங்கி வருகின்றோம் என்று தவறான பிரசாரம் இன்று திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. தந்தை செல்வா வழியில் வந்த நாம் எந்தக்கட்டத்திலும் எமது இலட்சியத்தை மறந்து செயல்படமாட்டோம்"

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன்துறை தொகுதி எம். பி. மான திரு. அ. அமிர்தலிங்கம் மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்,

படிப்பகத்தலைவர் திரு. பொ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்லம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"எமது அரசியல் சாணக்கியத்தைப் பயன்படுத்தி எந்த நேரத்தில் எதைச்செய்யவேண்டுமோ அதை மதிநுட்பத்துடன் செய்து வருகின்றோம். அமைதியாக இருக்க வேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்து, போராட வேண்டிய சந்தர்ப்பத்தில் போராட வேண்டும். தினமும் போராட்டம் நடாத்தும் விடுதலை இயக்கங்கள் உலகில் எதுவும் இருந்தது கிடையாது. பாலஸ்தீன விடுதலை இயக்கமுட்படப் பல விடுதலை இயக்கங்கள் சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் போராட்டங்களை நடாத்தி விட்டு மற்றைய நேரங்களில் வெளிநாடுகளிலும், ஐக்கிய நாடுகள் சபையிலும் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

"வடக்கில் சிங்களவர்களையும், தெற்கில் தமிழர்களையும் குடியேற்றுவோம் என்று கூறி வந்த ஜனாதிபதி எமது பலத்த ஆட்சேபத்தினாலும், எதிர்ப்பினாலும் எந்தவொரு மாகாணத்திலும் அங்கு வாழும் மக்களின் இன விகிதாசாரம் பாதிக்கப்படாதவாறு குடியேற்றம் நடாத்தப்படுமென்று உறுதியளித்துள்ளார். இது நிறைவேற்றப்படுமானால் எமது மக்களை எதிர் நோக்கியுள்ள பாரிய பிரச்னை நீங்கிவிடும்."

"மட்டக்களப்பு பகுதியிலுள்ள சிலர் சுவாமி விபுலானந்தரை யாழ்ப்பாணத்தவர்கள் கௌரவிப்பது குறைவு என்று கருத்து வெளியிடுகின்றனர். இந்தப் படிப்பகத்திற்கும் இங்குள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் சுவாமி விபுலானந்தரின் பெயரைச் சூட்டி ஆண்டு தோறும் பெருவிழா எடுத்து வருவதை அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டும்"

இவ்விழாவில் சங்கானை பொலிஸ் நிலைய சார்ஜண்ட் திரு. கே. குலரத்தின, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. வி. இராஜசுந்தரம், திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினார்கள். (கு)

---

"பிறெஃக்ட்டின் நாடகங்களை

# தமிழில் அறிமுகப்படுத்தியது பாராட்டுக்குரியது"

(கொழும்பு)

"தமிழ் நாடக உலகில் புகழ் பெற்ற நாடகாசிரியர் பெர்டோல்ட் பிறெஃக்ட்டின் நாடகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவது அரிய நிகழ்ச்சியாகும். சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பல வருடங்களுக்கு முன்னரே அறிமுகம்படுத்தப்பட்டுவிட்ட நாடகங்கள் காலந்தாழ்த்தி என்றாலும் தமிழில் அறிமுகப்படுத் தப்பட்டது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் இந்தச் சிறந்த பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை அவைக்காற்றுக் கழகமும் பொறட்டுவப் பல்கலைக் கழக மாணவர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகம் அண்மையில் கொழும்பில் மேடையேற்றிய 'யுகதர்மம்' 'நாற்காலிக்காரர்' நாடகங்கள் பற்றிய விமர்சன அரங்கு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் திரு. அ. சந்திரகாசன் தலைமையில் நடைபெற்றபோது நாவலாசிரியர் திரு. செ. கணேசலிங்கன் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: பிறேஃக்டின் கலைக் கோட்பாட்டில் அக்கறை கொண்டுள்ள மாணவன் என்ற முறையில் 'யுகதர்மம்' நாடகத்தில் அவரது வாழ்க்கைத் தத்துவம் வெகு சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நெறியாளர் பாலேந்திரா பிறெஃக்டின் தத்துவக் கோட்பாட்டிற்குமிக நேர்மையோடு நடந்துகொண்டிருக்கிறார்.

கலாநிதி சண்முகரத்தினம் உரையாற்றுகையில் கூறியதாவது. இதுகாலவரை புத்திஜீவிகளின் மத்தியில் மட்டுமே உலவிவந்த பிறெஃக்டின் பெயர் இன்று சாதாரண மக்களின் மத்தியிலும் பிரபல்யம் பெற்றுவிட்டது என்பதற்கு யுகதர்மத்தின் வெற்றி நல்ல உதாரணமாகும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள கட்டுப்பெத்தை பல்கலைக் கழக மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். எஞ்சினியரிங் மாணவர்களாக இருந்தும் நாடகத் துறையில் ஈடுபட்டு இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைச்சாதித்தமை குறிப்பிடத் தக்கதாகும். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் இவர்களின் சாதனையைப் புறக்கணித்தாலும் சரித்திரத்தில் இவர்களுக்கு உரிய இடமுண்டு."

எழுத்தாளர், தெளிவத்தை ஜோசப் கூறியதாவது: "ஏறத்தாழ ஒன்றரை மணித்தியாலம் வியாபாரியும் கூலியும் நடத்திய சுடுமணற்போரை - வர்க்கைப் போரை - போரடிக்காமல் மட்டுமல்ல, கரகோஷம் பெறுமளவுக்கு "யுகதர்மம் நாடகத்தை நிகழ்த்திக் காட்டிய நெறியாளர் க. பாலேந்திரா தனது நெறியாள்கையின் முத்திரையை இந்த நாடகத்தில் பொறித்திருக்கிறார்."

அவர் மேலும் பேசுகையில் "இந்தியாவிலேயே கூட 'நாற்காலிக்காரர் போன்ற நாடகங்களின் மேடையேற்றம் தோல்வியில் முடிந்த நிலையில் க. பாலேந்திரா இந்நாடகத்தையும் மிக நேர்த்தியாகத் தயாரித்திருக்கிறார்" என்றார்.

பிரபல விமர்சகர் திரு. கே. எஸ். சிவகுமாரன், திரு. நா. சுந்தரலிங்கம், கலாநிதி இ. பாலசுந்தரம் உட்பட மற்றும் பலர் இவ்விமர்சனக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். ( )

---

# "பாகிஸ்தானுக்கு யு. எஸ். உதவி இப்போது கிடையாது

## 40 கோடிக்கு மேலும் இல்லை"

## சைரஸ்வான்ஸ் கூறுகிறார்

வாஷிங்டன், பெப். 6

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 40 கோடி டாலருக்குக் கூடுதலாக இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கமாட்டாது. எனினும் இந்த உதவி கூட ஏனைய நாடுகளுடன் ஆலோசனை நடத்தியபின்னரே வழங்கப்படும்.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் தெரிவித்துள்ளார்.

40 கோடி டாலர் இராணுவ பொருளாதார உதவி ஊ பாகிஸ்தானுக்கு வழங்குவதென்று ஏறகனவே அமெரிக்க அரசு எடுத்தமுடிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதென்றும் திரு. வான்ஸ் கூறினார். (இ)

---

## 5 பாடசாலைகள் தரமுயர்வு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைக்கல்விவட்டாரத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை கல்வி வட்டார பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனம் செய்தசிபார்சைத் தொடர்ந்து காங்கேசன்துறை எம். பி. திரு அ. அமிர்தலிங்கத்தினதும், வடமாநிலக்கல்வியதிபதி திரு. தி, மாணிக்கவாசகரதும்முயற்சியாலேயே இவை தரமுயர்த்தப்பட்டுள்ளன.

மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம், கட்டுவன்புலம் தமிழ்க்கலவன் பாடசாலை, குரும்பசிட்டி பொன், பரமானந்த வித்தியாலயம் என்பவையே மகாவித்தியாலயங்களாக தரமுயர்ந்துள்ளவையாகும். (கு)

---

## கடற் றொழிலாளர் சங்கத் தலைவர்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதி கடற் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக யாழ். அரசாங்க செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் யாழ். மாவட்ட அமைச்சரினால் நியமிக்கப் பட்டுள்ளார்.

இச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்களாக வட்டுக்கோட்டைத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. என். இரத்தினசிங்கம், பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர் திரு. மா, மகாதேவன், அ. அப்புத்துரை, வி. செந்தில்வேல், ஐ. சுப்பிரமணியம், எஸ். கிருபைநாதன், எம். வைரமுத்து, வே. செல்வராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய இயக்குனர் சபையின் முதலாவது கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (கு)

---

மகாவலியில் சிரமதானப் பணி:

# யாழ். நல்லெண்ணக்குழு இம்மாதம் 28-ல் செல்கிறது

(புலோலி)

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தில் நல்லெண்ண அடிப்படையில் சிரமதானப் பணியில் ஈடுபடுவதற்கு யாழ். மாவட்டத்தின் சகல தொகுதிகளிலிருந்தும் சுமார் 650 யுவதிகள் இம்மாதம் 28ம் திகதி மகாவலி அபிவிருத்தித் திட்டப்பகுதிக்குச் செல்கின்றனர்,

சிரமதானப் பணியில் ஈடுபடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் நேற்று யாழ். ஸ்ரேடியத்தில் மகாவலி அபிவிருத்திதிட்டத்தில் சிரமதானமூலம் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளும் நடைமுறைகளும் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

அங்கு செல்லவுள்ள இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் போக்குவரத்துவசதி, உணவு வகைகள், தங்குமிடவசதிகள் யாவும் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரச அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்டுள்ளார்.

---

# தி.மு.க. இ.காங். கூட்டணியால் சிறந்த பலன்

## கூட்டு தொடர்ந்து நீடிக்கும் என்கிறார் வெங்கடசுப்பையா

சென்னை, பெப். 6

தி. மு. க-இந்திரா காங்கிரஸ் கூட்டணி தொடர்ந்து இயங்குமென்று இந்திய உள்துறை பாராளுமன்ற ஸ்டேட் அமைச்சர் திரு. வெங்கட சுப்பையா தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகை நிருபர்களிடையேஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தி. மு. க- இந்திரா காங்கிரஸ் உறவினால் நலன் புல கிடைத்துள்ளதென்றும் திரு. சுப்பையா கூறினார். (இ)

---

## சைக்கிள் கடன் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சைக்கிள் வண்டி வாங்குவதற்காக இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த கடன் தொகை 600 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். சுகாதார அத்தியட்சகர் அலுவலக கடன்சபைச் செயலாளர் திரு. எஸ். [illegible] தெரிவித்தார். (இ)

---

# எல்சல்வடோரில் இரு பணய நாடகங்கள்

## அமைச்சருடன் கல்விஅமைச்சும் ஸ்பெயின் தூதரகமும் முற்றுகை

சன்சல்வடோர், பெப். 6

எல்சல்வடோரில் கல்வி அமைச்சைக் கைப்பற்றியுள்ள தீவிரவாத மாணவர்கள், அமைச்சுக் கட்டிடத்தில் கல்வி அமைச்சரையும் மற்றும் ஆயிரம் பேரையும் பணயம் வைத்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாம் தீவிரவாத மாணவர் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ள மாணவர்கள் அரசுக்கு சில நிபந்தனை விதித்துள்ளனர்.

### ஸ்பெயின் தூதரகத்தில்......

இதே வேளையில் தீவிரவாத ஆயுததாரிகள் 25 பேர் கொண்ட குழு ஒன்று இங்குள்ள ஸ்பெயின் தூதரகத்தில் தூதுவரையும் தூதரக அதிகாரிகளையும் தூதரகத்தில் பணயம் வைத்துள்ளது. (இ)

---


## குண்டு வீச்சு

சாலிஸ்பரி, பெப். 6

றொடீஷிய தேசியத் தலைவர் திரு. றொபேர்ட் முகாபேயின் இல்லத்தின்மீது இன்று கைக்குண்டு வீசப்பட்டது.

திரு. முகாபே தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அவரது சிரேஷ்ட உதவியாளர் இல்லத்தின்மீதும் குண்டு வீசப்பட்டதால் உதவியாளர் படுகாயம் அடைந்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் நடைபெற்ற சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை பொன் விழாவின் போது இறைவணக்கம் செலுத்தப்பட்டபோது விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர், பொன்விழா ஞாபகார்த்த திறந்தவெளியரங்கை அமைத்துக் கொடுத்த பட்டயக் கணக்காளர் திரு. இ. வி. தளையசிங்கம், திருமதி தளையசிங்கம் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், திறந்த வெளி அரங்கை திரு. தி. மாணிக்கவாசகர் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காண்க.

# அமெரிக்க-சீன நடவடிக்கை: 'ஸ்டேட்ஸ்மன்' கருத்து

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு மீண்டும் ஆயுதங்களை விநியோகிக்க அமெரிக்கா எடுத்துள்ள முடிவு குறித்து இந்திய மக்கள் கவலை கொண்டிருந்தனர். சீனவுடன் சேர்ந்து பாகிஸ்தானை மீண்டும் ஆயுதபாணியாக்கும் அமெரிக்க அரசாங்கத்தின் முயற்சிகள் உலகை மீண்டும் கெடுபிடி யுத்தகாலத்திற்குத் திருப்புவதாகவேதெரிகிறது.'' என்று இந்திய பத்திரிகையானஸ்டேட்ஸ்மன் எழுதியுள்ளது.

''1978 ஏப்ரல் முதல் அமெரிக்காவும் சீனவும் ஆப்கானிஸ்தானில் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளன. பாகிஸ்தானிலுள்ள ஆப்கன் கலகக்காரர்களுக்கு இந்த இரு நாடுகளும் ஆயுத நிதி உதவிகளை அளித்தன'' என்றும் 'ஸ்டேட்ஸ்மன்' எழுதியுள்ளது.

ஆப்கான நிகழ்வுகள் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்ற வாஷிங்டனின்கருத்தை இந்திய அரசு ஏற்கவில்லை என்று கூறும் இப்பத்திரிகை பாகிஸ்தானை ஆயுதபாணியாக்குவதனால்ஏற்படும் விளைவுகளின் அனுபவங்களை இந்திய உப கண்டம் ஏற்கனவே கண்டுள்ளது என்றும் எழுதியுள்ளது.

ஆசிரியர் சம்பள விநியோகம்:

# வடமாகாண அதிபர் சங்கம் இன்று கூடி ஆராயும்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக எழுந்துள்ள பதட்ட நிலைமை பற்றி ஆராய மூன்று வடமாகாண அதிபர்கள் சங்கம் இன்று யாழ்.மத்திய கல்லூரியில் கூடுகிறது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்களின் சம்பளப் பணம் கொள்ளையடிக்கப் பட்டதுடன், இதுவரை மூன்று பாடசாலைகளின் சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு காசோலை மூலம் ஆசிரியர் சம்பளப் பணம் வழங்கவேண்டுமென்று வடமாகாண அதிபர்கள் சங்கம் எடுத்த முடிவை, கல்விப் பகுதி மேலிடம் நிராகரித்தது சம்பளப்பணம் கொள்ளை போவதுமட்டுமன்றி அதிபர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதால் இதற்கு மாற்று நடவடிக்கைகளை ஏன் எடுக்கக்கூடாதென சங்கம் மீண்டும் மேலிடத்தை வலியுறுத்துவதுபற்றி முடிவுசெய்வதற்காகவே, இன்று கூடுகிறது. [சு]

# 'டி. வி.' படக்காட்சி: பொலிஸார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் டி. வி. படக்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பொலிசார் டி. வி. சாதனங்களையும், பட ரேப்புக்களையும் கைப்பற்றினர்.

கடந்த சில வாரங்களாக யாழ்நகரில் பல்வேறு இடங்களிலும் டி. வி. படக்காட்சி நடைபெற்று வந்தது.

டி. வி. படங்கள், இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி 11 மணிக்குமேல் காட்டப்படுவதாகவும், இதனால் அயல் வீடுகளுக்குத்தொல்லையாக இருப்பதாகவும் யாழ். நகர முதல்வருக்கும், ஆணையாளருக்கும் புகார் செய்யப்பட்டன.

இப்புகாரின்பேரில், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பொலிஸாருடன் தொடர்பு கொண்டதையடுத்து பொலிஸார் நேரில் சென்று படக்காட்சியைத் தடை செய்து இயந்திரசாதனங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

அரியாலை சின்னக்கிணற்றடியில், டி.வி. படக்காட்சி நடந்து கொண்டிருந்தபோது திடீரென பொலிசார் சென்று தடைசெய்தனர். இதனைத் தொடர்ந்து படக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்கள். குழந்தைகள் வெளியேறினார்கள். (க)

# உலகத்தில் நல்வழி நல்வார்த்தைகள் எவை?

## கோயம்புத்தூர் சுவாமிகள் விளக்கம்

(மாவிட்டபுரம்)

''உலகத்தில் நல்ல வழி எது; நல்லவார்த்தை எது, என்று நாம் தேடித்திரியத் தேவையில்லை. நமக்குமுன் வாழ்ந்து அருளொளிபரப்பிய அருளாளர்களது வழிதான் நல்லவழி. அவரகளது வார்த்தைதான் நல்ல வார்த்தை. இவற்றைப் பின்பற்றி நடந்தால் பிறவித் துன்பத்தைப் போக்கி பெரு வாழ்வு பெறலாம்''

இவ்வாறு கோயம்புத்தூர் பேரூர் மகா சன்னிதானம் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார், குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் அருளுரை நிகழ்த்தும் போது கூறினார்.

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் சுவாமிகள் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''நமது சமய குரவர்களும் அருளாளர்களும் வாழ்ந்து காட்டிய வழியைப் பின்பற்றினல் நாமும் அவர்களது நிலையை அடையமுடியும்.

''சன்மார்க்கத்தை பரப் இந்தியவிலும் ஏராளமான நிறுவனங்கள் உள்ளன. அதே போன்று ஈழத்திலும் இச் சபை சன்மார்க்கத்தை வளர்த்து வருவது பாராட்டத்தக்கது'' என்றார்.

பண்டிதர் இ. நமசிவாயம் தமதுரையில் ''நாம் சமயநூல்களைப் படிப்பதைவிடுத்து சமயப் பெரியார்களை கண்டு தரிசிப்பதும் அவர்களுடன்அளவளாவுவதும்தான் அறிவின் விருத்திக்கு பெருந்துணையாக அமையும் என்பது உறுதி. இந்த மகாசன்னிதானத்தை நாம் தரிசிப்பதன்மூலம் எமது நிலையில் சிறிது உயர்ந்துவிட்டோம்'' என்றார்.

சபைச் செயலாளர் திரு. இராஜரத்தினம் நன்றி கூறினார். (இ)

# யாழ் . மாவட்ட நீதவான்கள் சிலருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் வங்கிகளில் சிலர் மார்ச் மாதம் 1ம் திகதி முதல் பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணம் நீதவான் கே. எஸ். இராஜசிங்கம், மல்லாகம் மாவட்ட நீதவானகச் செல்கிறார். மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. ஆனந்தக்குமாரசாமி குருநாகல் மாவட்ட நீதிபதியாகச் செல்கின்றார்.

யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் தி . கே. எஸ். மகேசன் பருத்தித்துறை நீதவானகச் சல்கின்றார். பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் யாழ். மாவட்ட மேலதிக நீதவானகச் செல்கின்றார். யாழ். மாவட்ட மேலதிக நீதவான் திரு பாலவடிவேல் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகச் செல்கின்றார்.

கொழும்பு கோட்டை மேலதிக நீதவான் திரு. ரீ, யோகநாதன் யாழ்ப்பாண நீதவானக மாற்றம் பெற்றுள்ளார். (கொ)

# விளையாட்டு ஆண்டாகப் பிரகடனம்

[யாழ்ப்பாணம்]

கல்வி அமைச்சு 1980 ஆம் ஆண்டைப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான விளையாட்டு ஆண்டாகப்பிரகடனப்படுத்தியுள்ளது.

ஒவ்வொருமாணவரும் விளையாட்டுத்துறையில் பங்கு கொண்டமைக்கான சான்றிதழ்களையுடைவர்களாக இருக்கவேண்டும் என்பதில் கல்வி அமைச்சு அக்கறை கொண்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபமொன்று சகலபாடசாலை அதிபர்களுக்கும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் வருடாந்த மாணவர் விபரவிளையும்; சிறந்த விளையாட்டுவீரர்களின் பட்டியலையும் சமர்ப்பிக்கும் கேட்டுள்ளது. [நா]

# குற்றத்தடுப்பு மகாநாடு

(யாழ்ப்பாணம்)

குற்றத்தடுப்பு தொடர்பான மகாநாடு ஒன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 9ம்தேதி காலை நடைபெறவிருக்கிறது.

கல்வித்திணைக்களத்துடன் பொலிஸாரும் இணைந்து நடாத்தும் இம்மகாநாடு பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் இம்மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ( )

# யாழ்.உதைபந்தாட்ட லீக் நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர்; வைத்தியகலாநிதி ஜே.பி.சி. பிலிப்ஸ், பொதுச்செயலாளர்: எம். டி. தம்பிராசா நிர்வாகச்செயலாளர்: ஜீ.ஜீ. தேவதாசன் உபதலைவர்கள்: ஜனுப் எம்.இசடீன், எஸ்.எம். மாட்டின், எம். பேரின்பநாயகம் ஏ. தேவராஜா, பீற்றர் நவச்சந்திரன், எஸ். சிவகுரு. பொருளாளர்: எம். அருமைத்துரை (கு)

# தரமுயர்வு

(பண்டத்தரிப்பு)

இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலை இவ்வருடம் தொடக்கம் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுபற்றிய அறிவித்தலைக் கல்வி அமைச்சின் பணிப்பின் பிரகாரம் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் மேற்படி வித்தியாலய அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# அரசியல் ஆயுதமாக உணவு பாவிப்பு

## அல்ஜீரிய அமைச்சர் கண்டனம்

பாரிஸ், பெப்.6

''ஆப்கானிஸ்தான் விவகாரங்களை இன்று வன்மையாகக் கண்டிப்பவர்கள்தான் வளர்முக நாடுகள்மீது ராணுவ நடவடிக்கை எடுப்பதை மூர்க்கமாக ஆதரிப்பவர்கள்'' என்று அல்ஜீரிய அயல்நாட்டமைச்சர் முஹமத் பின்எஹியா தெரிவித்துள்ளார்.

இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் கழகச் சந்திப்பில் அவர் பேசுகையில் 'கெடுபிடி யுத்தத்தைத் தூண்டுவதற்கு ஆப்கான் சம்பவங்கள் முகாந்திரமாகக் கையாளப் படுவதாக'' கூறினார்.

''உணவு, அரசியல் ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுவதை கண்டித்த அவர், அரிசியையும் தானியங்களையும் இறக்குமதி செய்யும் வளர்முக நாடுகள் இதனால் பீதியடைந்துள்ளன என்றும் அரசியல் பலவந்தத்துக்கு உணவை எதிர்காலத்தில் பிரயோகிப்பதை அனுமதிக்க முடியாது'' என்றும்கூறினார்.

''முஸ்லிம் கண்ணோட்டத்தில் பார்க்கையில், மிக முக்கியமானது ஜெரூசலத்தினதும், ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணினதும் விடுதலையாகும். இதில் விந்தை என்னவென்றால், 1967ல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு ஆதரவளித்தவர்கள் இன்று இஸ்லாத்தின் பாதுகாவலர்களாக இருப்பது தான்என்றும் அல்ஜீரிய அயல்நாட்டமைச்சர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில்

# திங்கள் முதல் மா தாராளமாகக் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 11ம் தேதி திங்கள் முதல் மா தாராளமாகக் கிடைக்கும் என சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

[illegible] யாழ்ப்பாணம் வந்துள்ளதாகவும், தற்பொழுது பேக்கரிகளுக்கு மட்டுமே மா வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே தற்பொழுது பேக்கரிகளுக்கு மா விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இம்மாதம் 15ம் தேதி முதல் பேக்கரி உரிமையாளர்களும், தனிப்பட்ட வர்த்தகர்களும், நேரடியாக உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி காரியாலயத்தில் ஓடரைப் பெற்றுக் கொண்டுபோய், களஞ்சியத்தில் மாவையும் சீனியையும் நேரடியாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கான் நெருக்கடி:

# இந்திய அதிகாரிகள் குழு அண்டை நாடுகள் விஜயம்

## இலங்கை, ஆப்கான், நேபாளம், பங்களாதேஷ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும்

புதுடில்லி, பெப். 6

ஆப்கான்நெருக்கடியை அடுத்து இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பேச்சுவார்த்தைநடத்தும் பொருட்டு இந்திய உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளுக்குச் செல்கின்றன.

ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து அண்டைநாட்டுத் தலைவர்களுடன்கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதுடன்,இருதரப்பு உறவுகள் குறித்தும் இக்குழுக்கள் பேச்சு நடத்தும் என்று இந்திய வெளிநாட்டு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய அரசின் இத்திட்டத்திற்கமைய முதல்குழு இந்திய வெளியுறவு அமைச்சின் மேலதிகச் செயலாளரும் ஆப்கான் முன்னுள் தூதுவருமான திரு. எஸ். கே. சிங், தலைமையில் இன்று காபூல் செல்கிறது.

### இலங்கை விஜயம்

இந்திய வெளியுறவு அமைச்சின் காரியதரிசி திரு. எரிக் கொன்ஸ்டன்ரான் தலைமையிலானகுழு இம்மாதம் 3ம் திகதி முதல்16ம் திகதிவரைகொழும்பில் தங்கியிருந்துஇலங்கைஅதிகாரிகளுடன் பேச்சு நடத்தும். இதே குழு 12ம் திகதி முதல் 14ம் திகதிவரை டாக்காவில் பங்களாதேஷ்அதிகாரிகளுடன் பேச்சுநடத்தும்.

கட்மண்டுவுக்கும் ஒருவிசேட குழு செல்கிறது. (இ)

### பிரயாணிகள் அவதி

(மன்னார்)

மன்னார் பஸ்நிலையத்தில் இருந்த மலசலகூடம் தரைமட்டமாக்கியதைத் தொடர்ந்து பிரயாணிகள் மிகுந்த அவதிப்படுகின்றனர்.

மன்னார்க் கடற்கரையில் உள்ள மலசலகூடமும் பாவிக்க முடியாதபடி சீர்கேடடைந்துள்ளது. இதனால் வெளியிடங்களிலிருந்து வரும் பிரயாணிகள் மிகுந்த சிரமம் அடைகின்றனர். (கு)

### வாசனைச் சவர்க்காரம் இறக்குமதியாகும்

(யாழ்ப்பாணம்)

உடம்பில் பூசிக் குளிப்பதற்கான சவர்க்காரம் பெருமளவில் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மணச்சவர்காரங்களது விலை அதிகரிப்பிலேயே தரமான சவர்க்காரங்களைப் பாவனையாளர்களுக்கு வழங்க அரசுமுடிவு செய்துள்ளது.

சீனு, ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற தேசங்களின் உற்பத்தியாளர்களிடமிருந்து இசசவர்க்காரங்களைத் தருவிக்க ஏற்பாடுகள் ஆகியுள்ளன. (ந)

இந்திரா அரசு மேற்கொள்ளும்

# சகல முற்போக்குத்திட்டங்களுக்கும் இ. கம்யூனிஸ்ட் ஆதரவு அளிக்கும்

## தேசியக் கமிட்டி தீர்மானம்

புதுடில்லி, பெப். 6

இந்திரா காங்கிரஸ் அரசு எடுக்கும் சகல முற்போக்குத் திட்டங்களையும் ஆதரிக்கும் அதேவேளையில்லோகசபையில் மக்களின் ஜனநாயக உரிமைகளைப்பாதுகாக்கும் ஒரு எதிர்க் கட்சியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இயங்கிவரும்.

இவ்வாறு இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் திரு. இராஜேஸ்வரராவ் தெரிவித்துள்ளார்.

கட்சித்தலைவர் திரு. டாங்கேயின் ராஜினமா, கடந்த லோகசபைத் தேர்தல் முடிவுகள், ஆப்கான்விவகாரம் ஆகியன குறித்து கட்சியின் தேசியக்கமிட்டி ஆராய்ந்தது.

கட்சியின் தலைமைப்பதவியிலிருந்த மத்தியகமிட்டிஉறுப்பினர் பதவியிலிருந்தும் வெளியேறிய திரு. டாங்கேயின் ராஜினமாவை ஏற்றுக்கொள்வதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

### புதிய ஆப்கான் அரசு ஆதரவாளர் 6பேர்சுட்டுக்கொலை

காபூல், பெப். 6

ஆப்கானிஸ்தானில் ஈரான் எல்லைக்கருகே புதிய ஆப்கான் அரசுக்கு ஆதரவளித்த ஆறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இஸ்லாமிய நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் பின்னரே இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

புத்தளம் தபால் நிலையத்தில கடமையாற்றிய சில்லாலையைச் சேர்ந்த திரு. அன்ரன் செல்வராஜா உதவித் தபால் அதிபராக பண்டத்தரிப்பு தபால் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியா -- பாக். பிரதேச

# ஒருமைப்பாட்டுக்கு 'சிம்லா' ஒப்பந்தம் வழிவகுக்கும்

## இந்திய விசேட தூதுவரிடம் ஹக்

இஸ்லாமாபாத், பெப். 6

இந்திய-பாகிஸ்தான் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் தடைபலவிலக்கலுக்கும்போதுமான உத்தரவாதத்திற்கு 'சிம்லா' ஒப்பந்தம் வழிவகுக்கும்.

இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் இந்திய வெளியுறவுக் காரிய தரிசி திரு. சாத்தேயிடம் தெரிவித்தார்.

### இந்திராவின் கடிதம்

பாகிஸ்தானுக்கு 5நாள் உத்தியோகபூர்வவிஜயமொன்றை மேற்கொண்டுள்ள திரு. சாத்தே, இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் விசேட செய்தி அடங்கிய கடிதத்தை ஜெனரல் ஹக்கிடம் கையளித்தபோதே அவர்மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய-பாகிஸ்தான் உறவு மேலும் வலுவடையவும் இரு நாடுகளுக்குமிடையே கூட்டு ஒத்துழைப்பை மேலும் வளர்க்கவும் திரு. சாத்தேயின் பாகிஸ்தான் விஜயம் வழிவகுக்கும் என்றும் ஜெனரல் ஹக் தெரிவித்தார். (இ)


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

4 CYCLE BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!

Mel Ads


ஈரான் ஜனதிபதி பதவி ஏற்பு

# ஒழுங்கற்ற ஒளிபரப்பால் தலைவர் ராஜினமா!

தெஹ்ரான், பெப், 9

ஈரானிய புதிய ஜனதிபதி ஜனப் பாணி சதாரின் பதவியேற்பு நிகழ்ச்சிகள் ஒழுங்கற்ற முறையில் வானெலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சையையடுத்து தொலைக்காட்சி, வானெலி மன்றத்தலைவர் ஜனப் மௌசமி கொமெய்னி ராஜினமாச்செய்துள்ளார்.

ஒலிபரப்புத் தவறுகளுக்குத் தாமே பொறுப்பு என்றும ஜனப் கொமெய்னி கூறியுள்ளார்.

தொலைக்காட்சியில் பதவி ஏற்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டபோது சில பகுதிகள் கேட்க முடியாமல் இருந்ததாகவும் ஒளி அமைப்பு சீராக இல்லை என்றும்குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இச்செயல் குறித்து பத்திரிகைகளும் கண்டித்திருந்தன. (இ)

### டாக்டர் பட்டம்

(புதுடில்லி)

மத்திய பிரதேசத்திலுள்ள இந்திரா இசைக்கல்லூரி 'இசைக்குயில் எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கும், பிரபல ஹிந்திப பின்னணிப்பாடகி லதாமங்கேஷ்காருக்கும் டாக்டர் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது. (நா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
புகுந்த வீடு (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 4-45, 7-00, & 9-30 போன்: 7693
Zoltan Hound of Dracula

வெற்றிகரமான 4-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் – சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
முன்னர் பார்த்து மீண்டும் பார்க்கத் துடிப்போரும் தவறவிட்டு ஏங்குவோரும் அடுத்துவந்த இளம் சந்ததியாரும் கண்டு களிக்க கிடைத்த கடைசி சந்தர்ப்பம் இதுவே.
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 1-30, 4-15, 7-00 and 9-45 p.m.
Burt Lancaster - Dean Martin in
AIR PORT
The Great Novel.........Now A Motion Picture
Coming Soon : FRAMED
BADGE 373

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் – ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
பணக்காரப் பெண்
(புத்தம் புதிய கொப்பி)

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
Graham Dorsey became a legend after his death.
The trouble was he was still alive...
THE MOST WANTED MEN IN THE WEST!
Charles Bronson and Jill Ireland
"FROM NOON
TILL
THREE"
The west will never be the Same again...but then neither will BRONSON. More Suited for adults.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
7-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
7 FROM TEXAS

TO-DAY ONLY
Shanthi JAFFNA Phone: 7642
Daily 5 Shows - 10-30, 2-30, 4 45, 7-00 & 9-30 p.m.
"The Taking of Pelham One Two Three" Scope Color
8-2-80 THE DEADLIEST CLAWS ON EARTH!
"GRIZZLY" Terror! Horror!! Suspense!!!
-COLOR-

# இன்றைய பலன்

தை மாதம் 24-ம் திகதி
வியாழக்கிழமை
(7-2-1980)

மேடம்: பிரிந்தவர் வாழ்க்கையில் ஒற்றுமை மலரும், திருமண விடயமும் இடம் பெறலாம், செல்வாக்கும் பெருகும்.

இடபம்: அன்னியர் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வர், குடும்பவழிச் சுகக்குறைவுமுண்டாம்.

மிதுனம்: புண்ணிய கருமங்களை நாடுவீர்கள், தொழில் துறையில் புதிய சாதனை உருவாகும், தந்தைவழி தனவரவுமுண்டு, தெய்வத்தின் துணையுமுண்டு.

கடகம்: பொதுசனத் தலைமைக்கிடமுண்டு, கடமையில் உற்சாகம் பெருகும், பூமிச் சிறப்புமுண்டு, நன்னாள்.

சிங்கம்: காதலனைத் தாக்கும், கலைஞர்களுக்கு ஆதரவு கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சியுண்டு, அதிர்ஷ்டகரமான தினம்.

கன்னி: அற்ப விடயத்திற்கும் பொல்லாங்கு கேட்க நேரிடும், எதிர்பாராத பொருள் விரையங்களும் ஏற்படலாம், பொறுமை உணர்ச்சி விரும்பத்தக்கது.

துலாம்: வெளியிடத்து உறவு வேதனை தரலாம், வாழ்க்கையிலும் புதிர் தோன்றும், சிந்தனைக்கிடமளியாது அடக்கத்துடன் இருக்கவும்.

விருச்சிகம்: கல்வியில் முன்னேற்றம், கடமையில் உற்சாகம் இவற்றுடன் வாழ்க்கையும் வளம்பெறும், கணிசமான நாள்.

தனுசு: வெளியிடத்துப் பயணம் வேதனை தரலாம், வேண்டாத உறவுகளை தவிர்த்தல் நன்று, சகோதர சுகக் குறைவுமுண்டு.

மகரம்: முதலீடு செய்வதற்கு உகந்த நாள், தானிய விருத்தியுண்டு, நன்மையான இடப்பிரிவும் ஏற்பட இடமுண்டு.

கும்பம்: விருந்தினர் வருகையால் கலகலப்பு தென்படும், பிரச்னைகளுக்கு இன்று முடிவு காணப்படும், புத்திரர் மகிழ்ச்சியுமுண்டு.

மீனம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். தொழில்புரியுமிடத்தில் பகைமை உருவாகும், சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ராஜ்ஸ்ரீ
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-மாலினி
பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-நாமினி
லட்சுமி கல்யாணம்

# பாணுக்குப் பதிலாக 'கேக்' வகைகள்!

(யாழ்ப்பாணம்)
பாண் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இந் நேரத்தில், யாழ்.நகரிலுள்ள பல பேக்கரிகளிலும், சிற்றுண்டிச் சாலை, மற்றும் கடைகளிலும் பெருந்தொகையான 'கேக்' வகைகள் தயாரிக்கப்பட்டு. விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பாணுக்குச் செல்லும் மக்கள் பாண் கிடைக்காமல் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் பல்வேறுவகையான 'கேக்' வகைகளையும் பார்த்து, ஏமாற்றத்துடன் தினமும் செல்கிறார்கள்.

தற்பொழுது, பாண் தயாரிப்பதற்காக, பேக்கரிகளுக்கு மட்டும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மாவிநியோகம் செய்துவருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்கும் சகல மாவும், பேக்கரிகளுக்கே வழங்கப்பட்டுவருகிறது. (க)

சுருட்டுத் தொழிலாளர் பிரச்னை:

# "110 தொழிற்சாலைகள் கணக்குத் தீர்த்துவிட்டன"

(யாழ்ப்பாணம்)
"சுருட்டுத் தொழிலாளரின் சம்பளப்பாக்கியில் 1, 75, 850 ரூபாவும் கணக்குத் தீர்க்கப்பட்டுவிட்டது. அதனால் 110 தொழிற்சாலைகளுக்குசுருட்டுத் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்று விட்டனர்" என்று தாவடியில் நடைபெற்ற இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக்கூட்டத்தில்தலைமை வகித்துப் பேசுகையில் திரு. மா.க. முதலியார் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. முதலியார்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இதுவரை மிகுதிக் கணக்குத்தீர்க்கப்படாமலிருக்கும்236 தொழிற்சாலைகளும் ஒருமாதத்திற்குள் கணக்குத்தீர்த்துவிட வேண்டும். கணக்குத் தீர்க்கத் தவறும் தொழிற்சாலைகளைத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் பகிஷ்கரிக்க வேண்டும்.

"பீடியின் விலை கூடியுள்ளதால் சுருட்டுக்கு அதிககிராக்கி ஏற்பட்டுள்ளது. அதனால் தொழிலாளர்கள் எக்காரணங் கொண்டும் குறைந்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு வேலைக்குச் செல்லக்கூடாது.

"வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருகின்ற இவ்வேளையில் சுருட்டுத் தொழிலாளர்களின் உணவு முத்திரையும் பறிக்கப்பட்டுள்ளது. அதனால் தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தைவெற்றியடையச்செய்ய தங்களுக்குள் உள்ள பிளவுகளையும், குரோதங்களையும் மறந்து ஓரணியில் நின்று போராடவேண்டும்.

"தென்பகுதியில் சுருட்டுப் பாவனை அதிகரித்துவருகிறது. அதனால் தென்பகுதிக் கடை முதலாளிகள் சுருட்டு அனுப்பி வைக்கும்படி வடபகுதி முதலாளிகளுக்குத் தந்திக்கு மேல் தந்தி அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் சில முதலாளிகள், தொழிலாளர்களுடன் இரகசிய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு வருவதாக அறியப்படுகிறது. அதற்குச்சில தொழிலாளர்கள் உடந்தையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு எதிராக எமது சங்கம் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்"

திருவாளர்கள்: க. விசுவலிங்கம், க. சண்முகவேல், செ. தம்பிராசா, க. தங்கராசா உட்பட மற்றும் பலரும் பேசினர். (கொ)

# "சுருட்டுத்தொழில் கூலியை சிறிதும் விட்டுக்கொடாதீர்"

(யாழ்ப்பாணம்)
"தொழிலாளர்கள் போராட்டமூலமாக உயர்த்திய கூலியைக்கொஞ்சமேனும் விட்டுக்கொடுக்கக் கூடாது" என்று நல்லூரில் நடைபெற்ற அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கக்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. ஆ. துரைராஜசிங்கம் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

மனிதனுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறி வருகிறது. இந்த இக்கட்டான நிலையைத் தொழிலாளர்கள் தாங்க முடியாது தவிக்கிறார்கள். இந்நிலையை உணர்ந்து உதவிசெய்ய வேண்டிய முதலாளிகள் உதவி செய்யாவிட்டாலும் அவர்களுக்காக உயர்த்தப்பட்ட கூலியைச் சரிவரக் கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும்."

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

'சம்பளத்தைக் குறைக்கும் முதலாளிகளுக்கு எதிராகப் போராடுகின்ற தொழிலாளர்களை சங்கம் ஆதரிப்பது.

1-11-79 தொடக்கம் உயர்த்தப்பட்ட சம்பளம் 50ரூபாவை சரியாகக் கொடுக்காமல் குறைத்துக் கொடுத்த பணத்தை திரும்பவும் முதலாளிகள் வழங்க வேண்டும்.

சகல சுருட்டுத் தொழிற்சாலைகளிலும் எங்கள் பிரதிநிதிகள்முன்னிலையில்கணக்குத் தீர்த்தல் வேண்டும்.

திருவாளர்கள் ஆ. சந்தையா, வ. கிருஷ்ணபிள்ளை, சி. கந்தையா, வா. இராமமூர்த்தி, திருஞானசம்பந்தர், கந்தசாமி ஆகியோர்பேசினர். (கொ)

......

# இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் ஸ்ரீகொண்டலடி வைரவ கோவிலில் இன்று 1008 சங்குகள் வைத்துத் திருநெல்வேலி சிவன்கோவிலின் முன்னாள் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ நடராஜக் குருக்களின் சீடர் ராஜாஜிக்குருக்கள் தலைமையில் சங்காபிஷேகம் நடைபெறவிருக்கின்றது. (க)

......

# மகா கும்பாபிஷேக மண்டலம்

(சரவணை)
சரவணை புன்னஸ்சீமால் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமி மகாகும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து 12நாட்கள் அபிஷேகம் நடைபெற்று இம் மாதம் 17ம்திகதி ஞாயிறு இரவு பொங்கல் வழிபாடும், மண்டலபூர்த்தியும் இடம் பெறும். பிரதிஷ்டாகுருவாக வேதாகமபூஷணம் சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் போல்
வர்ண நிறங்களில்
இலகுவாக கிடைக்கிறது
HONDA
மோட்டார் சைக்கிள்கள்
C 90
C 125
C 250
இப்போது கிடைக்கிறது.
இன்றே பதிவுசெய்யுங்கள்
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## எம். ஜி. ஆர். சென்னை திரும்பினர்

(சென்னை)
புதுடில்லி சென்றிருந்த தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி.ராமச்சந்திரன் நேற்று சென்னை திரும்பினர்.
பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை அவர் சந்திக்க விரும்பிய போதிலும் பிரதமரின் உடல்நிலை காரணமாக அவரை சந்திக்க முடியவில்லை. முதல்வருடன் சென்றிருந்த நிதியமைச்சர் திரு. மனேகரன் புதுடில்லியிலேயே தங்கியிருக்கிறர் அவர் பிரதம மந்திரியைச் சந்திக்கக்கூடுமென்று தெரிகிறது.

ஏகப்பட்ட கிராக்கியினுல்
கையிருப்பு முடிந்துவிட்டது
புதிய தொகை சில தினங்களில்
கிடைக்கும்.
FALCON SCOOTERS
பல்க்கன் ஸ்கூட்டர்கள்
● பல நிறங்களில்
● விரும்பிய டிசைன்களில் தேர்ந்தெடுக்கலாம்
பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

### அரச அதிபர் தலைமையில்

# கச்சதீவு உற்சவ ஏற்பாடுகள் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)
கச்சதீவு உற்சவம் சம்பந்தமான மாகாநாடு ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்றது.
கொழும்பிலிருந்து வந்த குடியகல்வு குடிவரவு திணைக்கள அதிகாரி யாழ். குருமனையைச் சேர்ந்த சுவாமிகள் ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.
மார்ச்மாதம் 6-ம் திகதி முதல் 9-ம் திகதி வரை நடைபெறும் உற்சவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக இம்மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து அரசாங்க உத்தியோகத்தர்கள் கோஷ்டி ஒன்று கச்சதீவு செல்லவுள்ளது.
மார்ச் மாதம் 5-ம் திகதி முதல் உற்சவம் முடியும் வரை அரசாங்க உத்தியோகத்தர்கள் கச்சதீவில் தங்கியிருந்து கடமையாற்றுவர்.
கட்டளை குரவர் பீற்றர் துரைரத்தினம் உற்சவத்திற்குப் பொறுப்பாக இருப்பார்.
வழமையாக இயங்கிவந்த 5 துறைமுகங்களிலும் இருந்து இம்முறையும் வள்ளங்கள் கச்சதீவுக்குச் செல்லும்.
வள்ளங்கள் காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை துறைமுகங்களில் இருந்து செல்வதற்கு அனுமதிக்கப்படும்.
கச்சதீவுக்கு எடுத்து செல்லும் பொருட்கள் பற்றிய விபரங்கள் பாதுகாப்பு அமைச்சினுல் நடாத்தப்படும் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் யாழ். கச்சேரியில் நடைபெற்ற மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.
கச்சதீவில் பொலிஸ் நிலையமும் வழமை போல் இம்முறையும் இயங்கும். (கொ)

### தொண்டைமானுறு

# வெளிக்கள நிலைய புதியநிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)
தொண்டைமானுறு வெளிக்கள நிலைய ஆண்டுப் பொதுக் கூட்டம் திரு. கே. எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்றது. எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், பாடவிதான அபிவிருத்தி நிலையக் கல்வி அலுவலரும் நிலையத் துணைத்தலைவருமான திரு. மு. அற்புதநாதன் ஆகியோர் உரையாற்றினர்.
புதிய ஆண்டிற்குரிய அலுவலர் தேர்வுகள் வருமாறு:
தலைவர்: திரு. க. இரத்தின சபாபதிப்பிள்ளை (தூய பத்திரிசியார் கல்லூரி), துணைத் தலைவர்கள்: திரு. மு. அற்புதநாதன் (கல்வி அலுவலர், பாடவிதான அபிவிருத்தி நிலையம்) திரு. வி. க. ஈசுரபாதம் (வட்டாரக் கல்வி அலுவலர்), இணைச்செயலர்கள்: திரு. க. பொன்னம்பலம் (வட்டாரக் கல்வி அலுவலர் விஞ்ஞானம்) திரு. நா. கணேசபிள்ளை (துணை நெறியாளர், வெளிக்கள நிலையம்), பொருளாளர்: திரு. எஸ். ரேய் காந்தராஜ் (துணை அதிபர் நெல்லியடி ம. ம. வி), துணைப்பொருளர்: திரு. வ். சச்சிதானந்தம் (சேவைக்கால க்கல்வி ஆலோசகர் விஞ்ஞானம்)
இதழ் ஆசிரியர்: மயிலங்கூடலூர் பி. நடராசன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) நூலகர்: திரு. நா. கணேசபிள்ளை, செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்; கே. எஸ். குகதாசன்- யாழ். இந்துக் கல்லூரி, கே. சிவபாதசுந்தரம் - நெறியாளர் வெளிக்கள நிலையம், கே.செல்வவிநாயகம் - சிதம்பராக் கல்லூரி, நா. சுவாமிநாதன், சிதம்பராக் கல்லூரி, செல்வி எஸ். வேலுப்பிள்ளை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, திரு. ஐ ஜெகநாதன், சேவைக்கால கல்வி ஆலோசகர் (விஞ்ஞானம்) ஆய்வுக் குழுத் தலைவர்: கலாநிதி கா. சித்திரவடிவேலு -பலாலி ஆசிரியர் கல்லூரி, கனிஷ்டக் கழகக் காப்பாளர்: செல்வி. தே. தில்லையம்பலம், கனகரத்தினம் ம. ம. வி., கல்வித்திணைக்கள இணைப்பு அலுவலகர், ஜனுப்எம். எம். மன்சூர், பிரதம கல்வி அலுவலகர் திரு. எஸ். கமலநாதன், வட்டாரக் கல்வி அலுவலர் (விஞ்ஞானம்) கணக்காய்வாளர்: திரு. க. நடனசபாபதி, நீர்வளச்சபை.

## மகாகும்பாபிஷேகம்

(கோண்டாவில்)
கோண்டாவில் மேற்கு ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையார் கோவில் ஜீர்நோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நாளைவெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.
கும்பாபிஷேகத்தை பிரதம சிவாச்சாரியார் கிரயாகலாத முக்தாமணி சிவஸ்ரீ ச. மகேஸ்வர சிவாச்சாரியார் நடாத்திவைப்பார். (நா)

## தெல்லிப்பழை ஞானேதய சபை ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]
தெல்லிப்பழை பாலர் ஞானேதயசபையின் 33 வது ஆண்டுப் பூர்த்தி விழாவும் கலை விழாவும் பரிசளிப்புவைபவமும் இன்றும் நாளையும் நடைபெறும்.
துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இன்று முதல் நிகழ்ச்சிகள் நடைபெறும்.
இன்று மாலை சமய வகுப்பு மாணவிகளின் சமய நிகழ்ச்சிகளும் அதைத் தொடர்ந்து விசேஷ பூசை, மாணவர் இசை நிகழ்ச்சிகள், சங்கீத பூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமரின் சங்கீதக்கச்சேரி ஆகியன இடம்பெறும்.
நாளை மாலை சட்டத்தரணி நம. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் விழாவில் விசேஷ பூசையும் அதைத் தொடர்ந்து கூட்டுப்பிரார்த்தனை, மாணவர் இசை ஆகியனவும் இடம்பெறும். அதைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வர சர்மாவின் மாணவி செல்வி மங்கைலட்சுமி செல்லையாவின் வயலின் அரங் கேற்றம்நடைபெறும்.
பௌராணிகவித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா ஆசியுரை நிகழ்த்துவார். திரு. அ. சரவணமுத்து பாராட்டுரை வழங்குவார். அதைத் தொடர்ந்து பரிசில்கள் வழங்கப்படும். (கொ)

## தவறி விழுந்து சாரதி மரணம்

(மட்டக்களப்பு)
பஸ்ஸின் மிதிபலகையில் பிரயாணம் செய்த சாரதி ஒருவர் தவறி விழுந்து மரணமானுர் இச்சம்பவம் மட்டக்களப்பு சின்ன ஆஸ்பத்திரியடியில் நடைபெற்றது.
காலஞ்சென்றவர் கிழக்கிலங்கை பஸ் கம்பனி முன்னுள் சாரதி திரு.க. மாணிக்கசிங்கம் ஆவார் காலஞ்சென்றவர் எட்டுப்பிள்ளைகளின் தந்தையாவர்.
இவரின் மரணம் குறித்து விசாரணை நடத்திய மட்டக்களப்பு மரணவிசாரணை அதிகாரி திரு. ரி. சிவநாதன் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்து பிரயாணிகள் பஸ் நெருக்கடியான நேரத்தில் மிதிபலகை பிரயாணத்தை தவிர்க்க வேண்டுமெனவும் கூறினுர்.

# அறிஞர் அண்ணுவுக்கு தமிழர் செய்யும் கைமாறு

## நினைவுக் கூட்டத்தில் விளக்கம்

[கொழும்பு]
''உலகத் தமிழர்கள் தமது சாதிகுல வர்க்கபேதங்களை மறந்து ஒன்றுபட்டுஎழுப்பதும் உரிமைக்குரல் எழுப்புவதுமே பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு தமிழர்கள் செய்யக்கூடிய கைமாருகும், ஆபிரிக்க செனகல் நாட்டிலே தமிழ்மொழி பயிற்றுதற்கு பேராசிரியர் இருவர் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ருல் தமிழர்களின் பண்பாடு ஆபிரிக்காவரை பரந்திருந்தது என்பதையே அது காட்டுகின்றது. தமிழ்ப் பண்பாட்டைக் காப்பதிலும் உலகத் தமிழர் இன்னல் களைய குரல் எழுப்புவதிலும் முன்னணியில் நிற்பது திராவிட முன்னேற்றக் கழகந்தான்'' என்று பேரறிஞர் அண்ணுவின் 11ம் ஆண்டு நினைவுநாள் பொதுக்கூட்டத்தில் கலைஞர் கருணுநிதி பொதுப்பணிமன்றத் தலைவர் திரு. க. நவசோதி குறிப்பிட்டார்.
திரு. எஸ். பி. பாண்டியன் தலைமையில் விவேகானந்த சபை உள்மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வர்த்தகப்பிரமுகர் ரேகா விசுவநாதன் அண்ணுவின் உருவப் படத்திற்கு மலரஞ்சலிசெலுத்தினுர்.
திரு. பாண்டியன் தனது தலைமையுரையில் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையைத் தமிழ்நாட்டில் பரப்பியதில் பெரும் பங்கு பேரறிஞர் அண்ணுவுக்கு உண்டு என்று குறிப்பிட்டார்,
மன்ற துணைத்தலைவர் கம்பளைதாசன் பேசுகையில் ''குறுக்குவழி என்பதை அறியாதவர் அறிஞர் அண்ணு. தமிழகத்தின் கவர்ச்சி யோகம் அரைவாசிச்கு மேல் மறைந்து விட்டது. பலர் முதலமைச்சராய் வீற்றிருந்தாலும் அண்ணு முதல்வராய்வந்தமை தான் சட்டமன்றம் பெருமை பெற்றது. கருத்துவேறுபாடு பெற்றிருந்தாலும் முதல்வராய் அமர்தற்குத் தந்தை பெரியாரின் ஆசியை அண்ணு பெற்றமை அவரின் பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்''
திருவாளர்கள் கலையன்பன், ம. செ. அருள், செபிலர், சோமசுந்தரன் ஆகியோரும் உரையாற்றினர்.

## சுபாந்திரியோ தண்டனை குறையும்

(ஜகார்த்தா)
மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்தோனேஷியாவின் முன்னுள் வெளிநாட்டமைச்சர் டாக்டர் சுபாந்திரியோவின் தண்டனை குறைக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தேசத்துரோகக் குற்றச்சாட்டின் மீது இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
ஜனுதிபதி சுகார்ந்தோ இவருக்கு கருணைகாட்ட விரும்புவதின் காரணமாக தண்டனை குறைக்கப்படவிருக்கிறது.

## வெளிநாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டுவதென்று முடிவுசெய்யப்பட்டது.
களனியா பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவு கட்டிடங்களுக்கு ஒரு லட்சம் 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

## உதைபந்தாட்டம்

(அநுராதபுரம்)
சிங்கர் கேடயத்திற்காக நடைபெற்ற இப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது திருமலை சென். யோசேப் கல்லூரியுடன் 7—0 தெல்லிப்பளை மகாஜானக்கல் கல்லூரியுடன் 3 – 2 கோல்களாலும் தோல்வியடைந்தது.
மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி ஏற்கனவே நடைபெற்ற இருபோட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது. திருமலை சென் யோசேப்புடன் 3 - 2 கோல்களாலும் தெல்லிப்பளை மகாஜானவுடன் 2 - 1 கோல்களால் தோல்விகண்டது.
தெல்லிப்பளை மகாஜானக் கல்லூரியுடன் நடைபெற்ற போட்டி இடைநடுவில் குழம்பியமையால் இப்போட்டி மீண்டும் அநுராதபுரத்தில் நடைபெறலாம் எனவும் அறியப்படுகிறது. (நா)

## யாழ். அரசாங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டே வாடகை பெற்றுர் என்ற காரணத்தினுல் அவர் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்பட்டது. தரம் ஒன்றில் இருந்து தரம் இரண்டுக்கு பதவி குறைக்கப்பட்டது. ஆனுல் அவர் மேன்முறையீடு செய்துகொண்டதையடுத்து குறைக்கப்பட்ட அவரது சம்பளம் திருப்பிக்கொடுக்கப்பட்டது.
இவ்வாறு பிரதிஅமைச்சர் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை ஈழநாடு ... ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ர... ... தம் 7-
Registered as a New... Sri Lanka under N... 3F/3948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org